**ஜூலை - 23**

**"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்." - 1தீமோ 5 : 8.**

மற்றவர்களுக்காகவும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்காகவும் அன்பு, இரக்கம், சிரத்தை, கவலை இவைகளைக் கருத்தில் கொண்டு செயல்படுவதையும் "விசுவாசம்" தன்னில் அடங்கியிருக்கிறது. நம்முடைய கர்த்தர் தாமே உபத்திரவத்தில் தொய்ந்து போயிருக்கும்போது அவர் மற்றவர்களுடைய நலன்களைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தார் என்பதைக் கவனிக்கும்போது, நமது கர்த்தருடைய அனுதாபமுள்ள சுபாவத்தைக் காண்கிறோம். தன்னுடைய பொறுக்க முடியாத துன்பம், தனது தாயைப்பற்றி எண்ணவும், அவளுடைய சுகானுபவங்களுக்காக ஏற்பாடு செய்வதையும் தடுக்கவில்லை. இதற்காக யோவானை அவர் தேர்ந்தெடுத்ததைக் கவனிக்கிறோம். அது சந்தேகமில்லாதது. காரணம், முதலாவது அவனுடைய அன்பான தயையுள்ள குணம், இரண்டாவது கர்த்தருக்காகவும் சத்யத்திற்காகவும் அவனுக்கிருந்த ஆர்வம், மூன்றாவது தன்னுடைய சொந்த உயிருக்கிருக்கும் அபாயத்தையும் பொருட்படுத்தாமல், மரித்துக்கொண்டிருக்கிற போதகருடைய பக்கத்தில் நெருங்குவதற்கு அவனுக்கிருந்த தைரியம். இந்தப் பண்புகளே கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகிறவைகளாய் இருக்கிறதை நாம் கவனிப்போமாக. இவைகளைக் கவனித்து இவைகளை நம்மில் வளர்ப்போமாக. இவ்விதமாக, அதே போதகரினால், ஊழியத்திற்காக விசேஷித்த சந்தர்ப்பங்கள் நமக்குக் கொடுக்கப்படுகின்றன. **- Z ’99, 127 (R 2473)**

இந்த ஜீவியத்தில் ஒவ்வொருவருக்கும் கொஞ்சம் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது அவனவனுடைய நிலைக்குத்தக்கதாக வித்தியாசமானதாயிருக்கிறது. குடும்பங்களில் வைக்கப்பட்டிருக்கிறவர்களுக்குத் தங்களுடைய நிலைக்குத்தக்கதாக விசேஷித்த பொறுப்புக்கள் இருக்கின்றன. குடும்பத் தலைவன் தன்னைச் சார்ந்திருப்பவர்களுக்கு, தேவையானவற்றைக் கொடுக்கக் கடமையினால் கட்டப்பட்டிருக்கிறான். இந்தப் பொறுப்பை அறிந்து கொள்ளவும் நிறைவேற்றவும், மறுத்தல் விசுவாசத்தை நிராகரிப்பதாகும். இப்படிப்பட்டவன் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருக்கிறான். **- P ’36, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஆதி 18:19; 30:30; நீதி 13:22; ஏசா 58:7; ரோம 12:17; 2கொரி 8:21; 12:14; கலா 6:10; எபே 6:4; மத் 18:17; தீத் 2:4,5.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 218 (R 4854)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் எனக்குச் சொந்தமானவர்களை விசாரித்தேனா? ஏன்? எப்படி? பலன்கள் எவை?**